# பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி–கோபி

(தன்னாட்சி)

தேசியத் தரமதிப்பீட்டுக் குழுவினரால் 'A'–தரச்சான்றிதழ் பெற்றது

## தமிழ்த்துறை

மற்றும்

## உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம், மலேசியா

**இணைந்து நடத்தும்**

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

### அறிவிப்பும் அழைப்பும்




இடம் :கல்லூரிக் கலையரங்கம்

நாள்: 22.01.2026 - வியாழக்கிழமை

பேரன்புடையீர் வணக்கம்,

## பி.கே.ஆர். மகளிர் கல்லூரியின் சிறப்பம்சங்கள்

மஞ்சளும் கரும்பும் கொஞ்சிவிளையாடும் இயற்கை எழில் மிகுந்த ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் 1994-ம் ஆண்டு தொடங்கப்பட்டது எம் பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி. கிராமப்புறப் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும் என்ற நற்சிந்தனையில் அமரர் திரு.பி.ஆர்.நடராஜன் ஐயா அவர்களால் நிறுவப்பட்ட கலைக்கோயில் எங்கள் கல்லூரி ஆகும்.

பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு தன்னாட்சி அங்கீகாரம் பெற்ற தனித்துவம் மிக்க கல்லூரியாகச் செயல்பட்டு வருகிறது. தரமான கல்வி, பல முன்னனி நிறுவனங்களில் 100% வேலைவாய்ப்பு, **(TCS, IDBI, CTS, Kotak Mahindra,etc….)** தொழில் முனைவோருக்கான பயிற்சி வகுப்புகள் **(Entrepreneur Development Cell, Non-Credit Certificate Courses)** பெண்களுக்கான சுயமுன்னேற்றப் பயிற்சி **(Women Development Cell)**, **Cisco, IBM, Ignite,** போன்ற நிறுவனப் பயிற்சிகளை ஆற்றல்சார் பேராசிரியர்களைக் கொண்டு திறம்பட நடத்தி வருகிறோம். விளையாட்டுத் துறையில் எம் கல்லூரி மாணவிகள் மாவட்ட, மாநில அளவில் வெற்றி பெற்று உலக அளவில் உன்னதமான சாதனைகளைப் புரிந்து வருகிறார்கள். அதுமட்டுமன்றி இந்திய இரயில்வே, மத்திய அரசுபணிகள், அரசுவங்கிகள் போன்ற பல இடங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். **NSS** -நாட்டு நலப்பணித்திட்ட அமைப்பு கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் ஒருகிராமத்தைத் தேர்வு செய்து அரும்பணியாற்றி வருகிறது. **YRC** -மாணவர் நல அமைப்பு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிவருகிறது,

(OBE) Out Come Based Education பாடத்திட்டத்தை சிறப்புடன் மாணவர்களுக்கு வழங்கிவருகிறது. CA, Banking, Civil Service, UPSC, UGC NET Coaching ஆகியபோட்டித் தேர்வுகளுக்கானப் பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. எம் கல்லூரிப் பேராசிரியர்கள் தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளிலும் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற ஆய்விதழ்களிலும் (UGCApproved Journals) ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கி வருகின்றனர். மேலும் பல்வேறு விதமான விருதுகளையும் பெற்றுகல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

## தமிழ்த்துறை

எம் கல்லூரியின் தமிழ்த்துறையானது மாணவர் நலனில் அக்கறை கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற துறையாகச் செயல்பட்டு வருகின்றது. இளநிலை (BA) முதுகலை (MA) முனைவர்பட்ட ஆய்வு (P.hD) துறை சார்ந்த நிபுணர்களால் நடத்தப்படும் நேரடிப் பயிற்சி வகுப்புக்கள். (NET, SET PLACEMENT TRANNING) அரசு போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்ளைத் தயார் செய்தல் (TNPSC, UPSC) தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகள் பல இடங்களில் அரசு பணிகளில் சிறந்து விளங்கி வருகின்றனர். வாகைத் தமிழ்ச்சங்கத்தினரால் கடந்த ஆண்டு சிறந்த தமிழ்த்துறைக்கான விருது பெற்றுள்ளோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேராசிரியர்கள் ஆய்வுத் தொடர்பான இதழ்கள் கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றை வெளியிட தமிழ்த்துறையில் 'செவ்விலக்கிய ஆய்வுமையம்' நிறுவப்பட்டுள்ளது, மாணவர்களின் படைப்பாக்கத் திறனை வெளிக்கொணர்தல், சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்புக்கானப் பயிற்சி போன்றவற்றை திறம்படச் செய்துவருகின்றது.

பல்வேறு அமைப்புகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மேற்கொண்டு அவ்வமைப்புக்களோடு இணைந்து ஆய்வுக் கருத்தரங்குகள், இலக்கிய இலக்கணச் சொற்பொழிவுகள், பயிற்சிப்பட்டறைகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் எனப் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகிறது. அவ்வகையில் இலக்கியத்தில் தொழில்நுட்பம் என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம். ஆகவே இக்கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற ஆய்வு கட்டுரைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## கருத்தரங்கக் களங்கள்

- சங்க இலக்கியங்கள்
- நீதி இலக்கியங்கள்
- பக்தி இலக்கியங்கள்
- காப்பிய இலக்கியங்கள்
- சித்தர் இலக்கியங்கள் நாட்டுப்புற இலக்கியங்கள்
- தற்கால இலக்கியங்கள்
- இலக்கணங்கள்

என்ற வகையில் கருத்தரங்கப் பொருண்மைக்குட்பட்ட வேறு தலைப்புகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

## கட்டுரைக்கான விதிமுறைகள்

- ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அமையலாம் 5 முதல் 10 பக்கங்கள் வரை அமைய வேண்டும்

- கட்டுரையின் தலைப்பு, பெயர், பணியிட முகவரி, மின்னஞ்சல் முகவரி, அலைபேசி எண், புலன எண் ஆகியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரை **A4** தாளில் 12 புள்ளிகள் அளவில் 1.5 இடைவெளியுடன் பாமினி யுனிக்கோடு எழுத்துருவில் **(Word Document)** தட்டச்சு செய்து இருத்தல் வேண்டும்.
- ஆய்வுச்சுருக்கம் **(Absract)** முதலில் ஆங்கிலத்திலும் அதன் பின்னர் தமிழிலும் 200 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் புத்தகங்கள், ஆய்வேடுகள், போன்றவற்றை நேர்த்தியான மேற்கோளிட்டு கட்டுரையிலேயே இடம் பெறச் செய்தல் வேண்டும்.
- ஆய்விற்குத் துணை நின்ற நூல்களின் பட்டியல் கட்டுரையின் முடிவில் (துணைநூற்பட்டியல்) அகரவரிசைப்படி தொகுத்துத் தருதல் வேண்டும்.
- ஆய்க்கட்டுரையானது ஆய்வு நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு தமது சொந்த முயற்சியில் உருவானதாக, இதுவரையில் பிற இதழ்களில் வெளியிடப்படாததாகவும், கருத்துத் திருட்டு இல்லாமலும் அமைதல் நலம்.
- தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், பிறதுறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், படைப்பாளர்கள் ஆய்வு மாணவர்கள் என அனைவரும் ஆய்வுக்கட்டுரை வழங்கலாம்.

- ஆய்வுக்கட்டுரை அனுப்ப வேண்டிய முகவரி tamil@pkrarts.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆய்வு கட்டுரையைப் பிழையில்லாமல் (**Word Document**) அனுப்ப வேண்டும்.
- ஆய்வுக் கட்டுரை மற்றும் கட்டணம் செலுத்த இறுதி நாள் 10.12.2025
- ஆய்வுக் கோவையானது **ISBN** எண்ணுடன் கருத்தரங்க நாளன்று வெளியிடப்படும்.
- புலனக் குழுவில் இணைவதற்கான இணைப்பு:

**https://chat.whatsapp.com/CTaSjabLp8cB836dS7zBZO?mode=wwt**

ஆய்வுக்கட்டுரை மற்றும் கட்டணம் செலுத்த இறுதி நாள் 10.12.2025

கருத்தரங்கம் நடைபெறும் நாள் : 22.01.2026 –வியாழக்கிழமை

கருத்தரங்கப் பதிவுக் கட்டணம்

| | | |
|---|---|---|
| ஆய்வாளர்கள் | : | 450 |
| பேராசிரியர்கள் | : | 600 |
| தமிழ் ஆர்வலர்கள் | : | 600 |
| அயல்நாட்டினர் | : | 1000 |

கட்டணம் செலுத்த வேண்டிய முகவரி

Account Name: P.K.R.ATRS COLLEGE FOR WOMEN, GOBI

Bank Name: KVB

Account NO: 1131115000000404

Branch: Gobichettipalayam

IFSC Code: KVBL0001131

தொடர்புக்கு: முனைவர் க.உமாமகேஸ்வரி, தமிழ்த்துறைத் தலைவர்

அலைபேசி எண் : 9659851517, 8667710410

## கருத்தரங்க ஆலோசனைக் குழுத் தலைவர்

- **திரு.பி.என்.வெங்கடாச்சலம்**
  தாளாளர் மற்றும் செயலர்
  பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி–கோபி
- **திருமதி எஸ்.ஏ. தனலட்சுமி**
  துணை முதல்வர்
  பி.கே.ஆர். மகளிர் கலைக்கல்லூரி–கோபி

## கருத்தரங்க ஒருங்கிணைப்புக் குழு

- **முனைவர் க.மோகனா**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **முனைவர் ந.அமிர்தக்கொடி**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **முனைவர் அ.செந்தமிழ்செல்வி**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **முனைவர் ச.அரியநாச்சியம்மாள்**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **முனைவர் சு.காயத்ரி**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **செல்வி. கே.நிவேதா**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **திருமதி. ச.வசுதா**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **செல்வி. க.மலர்விழி**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **செல்வி. த.சுஜித்ரா**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
- **செல்வி. ச.சிவவர்த்தினி**
  உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## பதிப்பாசிரியர்கள் குழு

- **முனைவர் க. உமாமகேஸ்வரி**
  தமிழ்த்துறைத் தலைவர்
- **மதிப்புறு முனைவர் தனேசு பாலகிருட்டிணன்**
  நிறுவனர்/தலைவர்
  உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம்
  மலேசியா
- **ஆசிரியை கவிதா வீரமுத்து**
  செயலவை உறுப்பினர்
  மலேசியா
- **ஆசிரியை புனிதா கருணாகரன்**
  செயலவை உறுப்பினர்
  மலேசியா
- **பேராசிரியர் முனைவர் குமரன் கெங்காதரன்**
  செயலவை உறுப்பினர்
  மலேசியா

# கருத்தரங்கப் பதிவுப் படிவம்

## இலக்கியங்களில் தொழில் நுட்பம்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

பெயர் :

கல்வித் தகுதி :

பணியிடமுகவரி :

தொடர்பு முகவரி :

மின்னஞ்சல் :

அலைபேசி எண் :

புலன எண் :

கட்டண விபரம் :

பணம் செலுத்திய விவரம் :

கையொப்பம்